தொல்காப்பியம் செய்யுளியல் பயிலரங்கு

பொருள்

உரை - 1

**இரா. சம்பத்**

இலக்கியவியல் புலம்

மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

புதுச்சேரி

உலகில் வாழும் அனைத்துப் பொருள்களும் உயிரும் மெய்யும் இணைந்தவை. இது மொழிக்கும் மொழியால் அமைந்த இலக்கியத்திற்கும் பொருந்தும். மானுடம் என்பது உயிரும் மெய்யும் சார்ந்தியங்கும் ஒரு படைப்பாகும். மானுடம் என்பதில் மெய் என்பது வடிவமும் உயிர் என்பது உள்ளடக்கமும் ஆகும். இலக்கிய வகைகள் அனைத்தும் மானுட வகைகளைப் போன்றவைதான். உயிரை உயிரும் மெய்யை மெய்யும் ஆளமுடியாது. பொருள் வெளிப்பாட்டிற்கு ஒரு வடிவம் வேண்டும். பாட்டுக்குப் பாடுபொருளும் வடிவமும் இரண்டு பக்கங்களாக அமைகின்றன.

**தொல்காப்பியமும் கவிதையியலும்**

தொல்காப்பியர் தன் காலத்தில் நிலவிய இலக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு இலக்கியத்தின் வடிவம், உள்ளடக்கம், உத்திகள், வகைமை ஆகியவற்றை ஆராய்ந்து இலக்கியக் கோட்பாட்டை வகுத்தளித்தார்.

**பாடுபொருள்**

திணை அடிப்படையிலேயே சங்க இலக்கியத்தைப் பிற்கால இலக்கியங்களிலிருந்து பிரித்துக் காட்டியது. திணை, கைகோள், கூற்று, துறை

ஆகிய உறுப்புக்கள் திணைப் பாட்டு உருவாகக் காரணமாக அமைகின்றன. எனவே, இவை சங்கக் கவிதையின் பாடுபொருளை முடிவு செய்கின்றன.

**சங்க இலக்கியத் தொகுப்பு**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரு தொகுப்புகளும் சங்க இலக்கியம் ஆகும். இரண்டு தொகை நூல்களிலும் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 2381 ஆகும். இவற்றுள் 1850 பாடல்கள் (80%) அகப்பொருள் பற்றியனவாகும். மற்ற பாடல்கள் புறம் பற்றியன.

**தொகுப்பில் பகுப்பு முறை**

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்தோர் பாடற்பொருள் பற்றி அகப்பொருட் பாடல், புறப்பொருட் பாடல் என இருவகையாகப் பகுத்து தொகுத்தனர். அகம், புறம் என்னும் பாகுபாடு சங்கப் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்தில் இருந்ததற்கான சான்று இல்லை.

**திணை, கூற்று, துறை – குறிப்பு**

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களுக்குத் திணை, கூற்று, துறை ஆகிய குறிப்புகளைப் பின்வந்தோர் தந்திருக்கலாம் என உ.வே.சா. கருதுகின்றார்.

**இலக்கியப் பகுப்பு**

ஆங்கில இலக்கியம் தற்சார் கவிதை (subjective Poetry), தற்சார்பற்ற கவிதை (Objective Poetry) என இருபிரிவாக அமையும். இப்பாகுபாடு கவிஞன் பொருள் உணர்த்தும் முறையால் அமைந்துள்ளது. சமஸ்கிருத இலக்கியம் திருஷ்ய காவியம், சிராவ்ய காவியம் என இருவகையாக அமையும். இப்பாகுபாடு கேட்போரை முதன்மைப்படுத்தி அமைவதாகும். சங்கப்பாடல் அவையோரையும்

கவிஞனது உணர்த்து முறையினையும் கவனத்தில் கொள்ளாது பாடலின் பொருள் தன்மையை மையப்படுத்திப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

**அகம்**

ஆணும் பெண்ணும் பார்த்து பழகி கூடி இல்லத்தில் வாழும் வாழ்க்கை முறையே அகப்பொருளாக அமைகிறது. திருமணத்திற்கு முன் ஒழுகும் முறையை களவு என்றும், மணமான பின் ஒழுகும் முறையைக் கற்பு என்றும் கூறுவர்.

**புறம்**

அகம் தவிர்த்த பிற மானிடப் பொருள்களைக் கொண்டதாக புறம் அமையும். போர், வீரம், கொடை, சமுதாயம் பற்றிய சான்றோர்களின் அறவுரை, அறிவுரை, கடவுள் ஆகியனவும் புறத்தில் அடங்கும். சங்கப் பாடல்களில் கடவுள் பற்றிய நிகழ்ச்சிகளும் குறிப்புகளும் இடம்பெற்றாலும் கடவுளைப் பாடற் பொருளாகக் கொண்ட பாடல்கள் இடம்பெறவில்லை.

**பொருளிலக்கணம்**

அகம், புறம் என்னும் பொருட்பகுப்பு முறை தமிழ் இலக்கியத்துக்கே உரியது என்றாலும் காதல், போர், வீரம், கொடை பற்றிய செய்திகள் பிறமொழி இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன. காதல், வீரம், கொடை, போர் போன்ற பண்புகள் எல்லா நாட்டினருக்கும் பொதுவானவை. எனினும், அகப்புற உணர்வுகளை உணர்த்துவதற்குத் தேவையான புலப்பாட்டு முறைகளையும் கொள்கைகளையும் வரையறை செய்து கொண்டு அவற்றிற்கிணங்கப் பாடல்கள் இயற்றுவது தமிழ் இலக்கியத்திற்கே உரிய பொருளிலக்கணம் ஆகும்.

**அகப்பாடலின் ஊற்றுக்கண்**

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர் (தொல். 1003)

இந்த நூற்பாவில் அகப்பாடல் பற்றிய இரண்டு செய்திகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது அகத்திணைப் பாடலுக்கான பாடுபொருள் பற்றியதாகும். மற்றொன்று அகப்பாடலின் பொருள் இடம்பெறும் பா வடிவம் பற்றியதாகும்.

**நாடக வழக்கு**

சுவைபட வருவனவெல்லாம் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும் அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்பட்டார் எனவும் அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும் பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் வந்தனவாகக் கூறுதல்.

**உலகியல் வழக்கு**

உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது.

**புலனெறி வழக்கம்**

நாடக உலகியல் வகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள். உலகியல் நடைமுறையில் காணப்படும் ஆண் – பெண் உறவு பற்றிய சூழல் ஒன்றினை நாடகமுறையில் தருவதிலிருந்தே அகப்பாடலுக்கான பொருள் உணர்த்துமுறை

உண்டாகிறது. உலகியல் நடைமுறையொன்று சாகித்திய தர்மியாக மாற்றப்படுகின்றது என்பதை மேற்கூறிய நூற்பா மூலம் அறியலாம்.

உலக வழக்கு மக்கள் வழக்காறோடும் நாடக வழக்கு பாணர் மரபோடும் புலனெறி வழக்கு புலவர் மரபோடும் தொடர்புடையது.

**செய்யுள் உறுப்பு – பாடுபொருள்**

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி
இதுவாகி இத்திணைக்கு உரிபொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்க.

பொருள் வகை என்னும் செய்யுள் உறுப்பு செய்யுளின் உயிராக விளங்கும் பாடுபொருளைக் குறிப்பதாக இளம்பூரணர் எண்ணுவார்.

இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கம் என்று சொல்லப்பட்ட இவை வழுவாத வகையினால் இத்திணைக்கு உரிய பொருள் இதுவென்று ஆசிரியர் ஓதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனாற் செய்யப்படுவது பொருள்வகை எனப்படும் என்பார் பேராசிரியர்.

**பாடுபொருளை உருவாக்கும் அகத்துறுப்புகள்**

திணை, கைகோள், கூற்று ஆகிய செய்யுள் உறுப்புகள் செய்யுளின் பாடுபொருளைத் தீர்மானிக்கும் உறுப்பாக அமைகின்றன.

**திணை**

அகப்பொருளுக்கு அடிப்படையாக அமைவன ஆண் பெண் ஆகிய இருவர் சேர்ந்து வாழும் இன்ப வாழ்க்கையாகும். இவ்வின்பத்தின் எதிர்நிலையாகப் பிரிவுத்துன்பம் அமையும். ஆண் பெண் சேர்ந்து வாழும் இன்ப வாழ்க்கையைக் குறிஞ்சியொழுக்கம் எனக் கொண்டனர். இவ்வொழுக்கம் களவு என்னும் கைகோள் மட்டும் நடைபெறும். ஆண் – பெண்ணின் பிரிவு ஒழுகலாற்றைப் பாலைத்திணை என பொதுவாகக் கொண்டு, அதனைக் களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளிலும் படைத்துக் காட்டுவர். இப்பிரிவு களவினுள் பாலையெனவும், கற்பினுள் பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனவும் பகுக்கப்பட்டுப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளது. இவ்வாறு நிலைத்து நிற்கும் ஒழுக்கத்தின் அடிப்படையில் ஆண் பெண்ணின் மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை வெளியிடும் வகையில் சங்கப் பாடல்களின் பாடுபொருள்கள் அமைந்திருக்கும்.

### திணைவழி பொருட்பாகுபாடு

அக இலக்கியத்தின் பொருட் பாகுபாட்டை முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகும்.

### முதற்பொருள்

உலகத்தில் நடைபெறும் அனைத்து மனித நிகழ்வுகளுக்கும் நிலமும் காலமும் அடிப்படையாக அமைகின்றன. இதனையொட்டியே சங்கப் பாடல் அனைத்தும் ஆண் பெண் மன உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

### கருப்பொருள்

இடத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றும் பொருள்கள் அனைத்தும் கருப்பொருள்களாகக் கொள்வர்.

**உரிப்பொருள்**

புணர்தல், இரங்கல், இருத்தல், ஊடல், பிரிதல் ஆகிய உரிப்பொருள்கள் தான் பாடலின் பாடுபொருள் முதற்பொருளும் கருப்பொருளும் பாடலின் துணைப் பொருள்களேயன்றி பாடற்பொருள்கள் அல்ல. முதற்பொருளும் கருப்பொருளும் திணையில் மயங்கும் பொழுது உரிப்பொருளே அதன் திணையை வரையறுக்கும்.

**அகப்பொருளும் புறப்பொருளும்**

அகத்திணைப் பாடுபொருள்கள் திணைக்கு ஏற்ப புலனெறி வழக்காக படைப்பாளர்களால் படைத்துக் கொள்ளப்பட்டவை. இது கவிதை மரபே தவிர உலகியல் மரபன்று.

போர், வீரம், கொடை, புகழ், அறநெறி, போன்ற வாழ்க்கையின் புறக்கூறுகளைப் பாடுபொருளாகக் கொண்டு புறப்பாடல் அமையும். அகப்பாடல்களைப் போன்றே இவையும் திணைகளாகவும் துறைகளாகவும் பிரிக்கப்பட்டுப் பாடப்பெற்றுள்ளன. இவை கவிதை மரபாகவே காணப்படுகின்றன. எனினும் பாடற்பொருளும், பாடலுள் பயிலும் மக்களும் அவர்தம் நிகழ்ச்சிகளும் கற்பித்துக் கொள்ளப்படவில்லை.

**பாக்களின் பாடுபொருள்**

அந்நிலை மருங்கின் அற முதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப (தொல். 1363)

ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலிப்பா ஆகிய நான்கு பாக்களும் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று பொருள்களுக்கும் உரியன.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல். 1038)

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம் (புறம். 31)

**இளம்பூரணர் விளக்கம்**

அறம், பொருள், இன்பம் எனத் தனித்தனியே பகுத்துரைக்கப்படுதலின்றி அம்மூன்றினையும் ஒன்றாக அடக்கிய பொதுமையுடைய பொருள் என நால்வகைப் பாக்களுக்கும் ஒப்ப உரிய பொருளின் முழுமை நிலையினைப் புலப்படுத்துவார். அறமுதலாகிய முப்பொருள் என்னாது அறமுதலாகிய மும்முதற்பொருள் என்றார் என்பது இத்தொடர் இளம்பூரணர் தரும் விளக்கமாகும்.

**சங்க காலமும் பாடுபொருள் மரபும்**

சங்கப் பாடல்களின் தொகுப்பையும் அதனோடு தொடர்புடைய தொல்காப்பியத்தின் அடிப்படையிலும் நோக்கும்போது 2381 பாடல்களில் 80% விழுக்காடு அகப்பொருளாகவும் 20% விழுக்காடு புறப்பொருளாகவும் அமைந்துள்ளன. எனவே, சங்க இலக்கியப் பாடுபொருள் மரபு அகம், புறம் என இருவகையாக அமைகிறது.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று வகையான பாகுபாடு வாழ்க்கைக்குரிய உறுதிப் பொருள்களாகத் தொல்காப்பியத்துள்ளும் புறநானூற்றுள்ளும் இடம்பெற்றாலும் சங்க இலக்கியத்தில் பாடுபொருள் கூறுகளாக அவை அப்போது அமையவில்லை.